**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 103/2015**
**நாள் :18.01.2024**

இந்நீதிமன்றத்து எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**பெயர்** : **வாசா.1.திரு.ஹரிஹரன் கோத்தி**
**வயது** :
**த/பெ** :
**தொழில்** :
**மதம்** :
**விலாசம்** :

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

வாசாஆ1 ஆவணமான பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் என்னிடம் யார் கொடுத்தது என்றால் பிரதிவாதிதான் என்னிடம் கொடுத்தார். எப்போது எங்கே வைத்து கொடுத்தார் என்றால் என்னுடைய அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 24.09.2004 கொடுத்தார். பொதுஅதிகாரபத்திரத்தை எப்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது காலையிலா அல்லது மாலையா என்றால் எந்த நேரத்தில் அந்த ஆவணம் பதிவுசெய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. கிரையரசீது ஆன வாசாஆ 6 மற்றும் வாசாஆ1 ஆவணம் என்னிடம் சென்னையில் கொடுக்கவாய்ப்பில்லை என்றும் பொது அதிகாரப்பத்திரம் மதியம் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ6 ஆவணம் ஆனது நான் நிரப்படாத தாளில் கையொப்பம் பெற்று அதனை நானே தட்டச்சு செய்து இந்த வழக்கிற்காக தவறுதலாக பயன்படுத்தினேன் என்றால் சரியல்ல. வாசாஆ 6 ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சாட்சி கையொப்பம் இல்லை.என்னுடைய வழக்குறையில் பத்தி 6ல் A Rs.20/- Stamp paper purchased during the sale agreement referred above and which had remained unutilized was used by the defendant for preparing the sale receipt and issuing it in favour of the plaintiff என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாசாஆ5 மற்றும் 6 ல் யார்யார் பெயரில் ஸ்டாம் பேப்பர் வாங்கப்பட்டது என்றால் வாசாஆ 5 ஸ்டாம் பேப்பர் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்டது வாசாஆ 6 ஸ்டாம் பேப்பர் என் பெயரில் வாங்கப்பட்டது. வாசாஆ 6 முத்திரைதாள் என்னுடைய ஆதாரத்தை காண்பித்து தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. அந்த முத்திரைதாள் பிரதிவாதிதான் வாங்கி வந்தார். வாசாஆ 7 ஆவணமான பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப்பத்திரம் எப்போது யார் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் பிரதிவாதிதான் என்னிடம் கொடுத்தார் எந்த தேதியில் கொடுத்தார் என்று ஞாபகம் இல்லை. வாசாஆ 7 ஆவணத்தில் பிரதிபலன் எதுவும் இல்லாமல் என்று சொல்லப்பட்டுள்ளது, கணக்கு வழக்குகளை பிரதிவாதியிடம் சமர்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 6 ஆவணத்தில் "தங்களுக்கு இன்றைய தினமே ரத்து செய்யமுடியாத பொது அதிகாரபத்திரம் எழுதி பதிவு செய்துக் கொடுக்க நான் தயாராக உள்ளேன்" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ6 ஆவணம் நானாக தயார் செய்த ஆவணம் என்றும், பிரதிவாதி மாலை வந்து என்னிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மாலை நேரத்தில் வந்து தான் என்னிடம் ஆவணத்தை கொடுத்தார். அறுவடை இயந்திரம் வாங்குவதற்கு நான் மற்றும் என் தந்தை சேர்ந்து பைனாஸ் செய்து வந்தோமா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் எத்தனை நாட்களுக்குள் கிரையம் முடிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ 5 ஆவணமான கிரையஒப்பந்த பத்திரத்தில் கிரைய பதிவு செய்வதற்கு 3 ஆண்டுகள் என காலகெடு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 5 ஆவணத்தின் படி 3 வருடத்திற்குள் பணம் கொடுக்கவில்லை என்றும் அதனால் 2007 ல் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ5 ஆவணம் சம்மந்தமாக 2007 ல் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வாசாஆ 5 ஆவணமானது கிரைய ஒப்பந்த பத்திரம் இல்லை என்றும் கடனுக்காக

Security க்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் அசலும் வட்டியும் சரியாக செலுத்து வந்தார் என்றும் அதனால் 2007 ல் கிரைய ஒப்பந்தத்தின் படி கிரைய பத்திரம் செய்து கொடுக்கும் படி அறிவிப்பு ஏதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 12 ஆவணம் என்னுடைய அனுமதி பெற்று அனுப்பப்பட்டதா என்றால் சரிதான். 2014 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் பத்தி 15 ல் கிரைய முன்பணமாக எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ.1,00,000 என்று சொல்லப்பட்டுள்ளது. 2007 லிருந்து 31.10.2014 வரையில் நான் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ 8 ஆவணத்தை பிரதிவாதி அவருடைய விருபத்திற்கு மாறாக நான் நடந்து கொண்டதால் பொது அதிகாரப்பத்திரத்தை ரத்து செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாசாஆ 12 ஆவணத்தில் பொது அதிகாரப்பத்திரத்தை ரத்து செய்து மட்டும் செல்லாது என்று சொல்லியிருக்கிறேன். பிரதிவாதியின் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்டதை மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 09.06.2014 அன்று பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு உடனடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு கிரைய ரசீதை நான் தயாார் செய்து அதன் பிறகு 31.10.2014 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி வழக்கு தாக்கள் செய்தேன் என்றால் சரியல்ல. 2004 ல் போடப்பட்ட கிரைய ஒப்பந்தத்திற்கு 2015 ல் வழக்கு தாக்கல் செய்ததற்கான காலதாமத காரணத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 7 ஆவணத்தில் எனக்கு கிரையஒப்பந்த பத்திரம் போட்டதால் தான் பொது அதிகார பத்திரம் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்று அதில் வார்த்தையுள்ளதா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக என் பெயரில் பொது அதிகாரப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் என் குடும்பத்தில் யார் பெயரில் கிரையப்பத்திரம் செய்யவேண்டும் என்று பிரச்சனை இருந்து வந்தது அதனால் என் பெயரில் பொது அதிகாரபத்திரம் ஏற்படுத்த சொன்னேன். தவாச்சொத்தை தவிற

பக்கத்தில் உள்ள மற்ற சொத்திற்கும் பொது அதிகாரப்பத்திரம் வாங்கி இருக்கிறேனா என்றால் இல்லை. "நானும் என் தந்தையும் சேர்ந்து பைனாஸ் செய்து வருகிறோம் என்றும் பைனாஸ் கொடுத்தவர்களிடமிருந்து பொது அதிகாரபத்திரம் மற்றும் கிரைய ஒப்பந்த பத்திரம் வாங்கி வந்தோம் என்றும் அது சம்மந்தமாக வழக்குகள் பொன்னேரி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன கேள்வி வாதி வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது."

**குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**முதன்மை சார்பு நீதிபதி**
**பொன்னேரி.**